முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1675

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.04.2024,** செவ்வாய்கிழமை

1. சக்திமிகு அரங்கனே வாழ்கவாழ்க
   சற்குருவாய் உலகோர்க்கு நன்மை புரியும்
   பக்தி சித்தி ஞான வழிஎன
   பாருலகோர்க்கு தர்ம ஞான வழி காட்டி
2. வழிகாட்டி அருளுகின்ற வள்ளலே மாதவசியே
   வல்லமைபட உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   தெளிவுபட ஞான அறிவுரை ஆசி
   தெரிவிப்பேன் குரோதி தகர் திங்கள் தன்னில்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 17 ம் நாள், 30.04.2024, செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கனுக்கு ஆற்றல் கூட்டி
   தண்டாயுதன் யான் உலகினில் அற்புதம் நடத்துவேன்
   மன்னவன் அரங்கன் எண்ணுகின்ற வண்ணம்
   மண்ணுலகை ஞானலோகமாக மாற்றி
4. மாற்றியே உன்வழி வருகின்ற உலகமக்களெல்லாம்
   மகா ஞானிகளாக ஆற்றல் பெருகவே
   மாற்றம் தந்து சுப்ரமணியர் யானும்
   மகத்துவம் பட இந்த உலகினில் ஞானவான்கள் படைப் பெருகப்பெருக
5. பெருகவே ஞானிகள் ஆட்சி வரும் வண்ணம்
   ஞானலமதில் உலகோர்க்கு கடைத்தேற்றம் அருளி
   ஞான தேசிகன் உன்வழி
   வழிகாட்டி அற்புதம் நடத்துவேன்
6. ஆகவே கலியுக மக்கள் அரங்கனைத் தேடி
   அகத்தியர் சன்மார்க்க சங்க வழியில்
   ஆற்றல்பட சைவ நெறி ஏற்று
   அரங்கன் தர்ம நெறி கொள்கைக்குள் வர

7. வருகவே வையகம் மாறும்
வள்ளல் தன்மைபட இந்த உலகம் மாறி
முருகப்பெருமான் என் தலைமைகொண்ட முழுமையான
ஞான ஆட்சிக் காலத்துக்கு தகுதி பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–